**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No.38/2023**

Deposition of witness for **RW1** for Respondent and solemnly affirmed and oath for sworn taken file by Tr.S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Sivakumar/SSI | Father Name | : | Theerthalingam |
| Village | : | | Age | : | |

**நாள்:20.11.2025.**

**எ. ம.சா.1. முதல் விசாரணை :**

நான் தற்போது ஓசூர் போக்குவரத்து புலன் ஆய்வு பிரிவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க போக்குவரத்து புலன்ஆய்வு உதவிஆய்வாளர் அவருக்கு அழைப்பாணை வந்தது அதன் பேரில் சாட்சியம் அளிக்க நான் வந்துள்ளேன். அழைப்பாணையில் கேட்டுள்ள ஆவணங்கள் கொண்டுவந்துள்ளேன். எங்கள் காவல் நிலைய குற்ற எண்.4/2022 ல் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, ஓட்டுநர் உரிமம் மற்றும் குற்ற இறுதி அறிக்கை கொண்டுவந்துள்ளேன். குற்ற எண்.4/2022 ல் உள்ள பார்வை மகஜர் **சா.சா.ஆ.1** ஆகும். குற்ற எண்.4/2022 ல் உள்ள மாதிரி வரைபடம் **சா.சா.ஆ.2** ஆகும். குற்ற எண்.4/2022 ல் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN24W8239 Hero Honda மோட்டார் சைக்கிள்க்கு உண்டானது **சா.சா.ஆ.3 ஆகும்.** குற்ற எண்.4/2022 ல் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 70W1500 Renault Duster Car க்கு உண்டானது **சா.சா.ஆ.4 ஆகும்.** TN 70W1500 Renault Duster Car ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் **சா.சா.ஆ.5** ஆகும். குற்ற எண்.4/2022 ல் குற்ற இறுதி அறிக்கையின் உண்மை நகல் **சா.சா.ஆ.6** ஆகும். குற்ற எண்.4/2022 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு எண் தெரியாத மாருதி சிப்ட் கார் மீதும் மற்றும் TN 70W1500 Renault Duster Car மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. குற்ற எண்.4/2022 ஆனது 02.08.2023 அன்று மாருதி காரை கண்டுபிடிக்கமுடியாதாதல் Undetected வழக்காக பாவிக்கப்பட்டு RCS இன்னும் தாக்கல் செய்யப்படவில்லை.

**குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில்**

முதல் தகவல் அறிக்கையில் எதிரியாக குறிப்பிடப்பட்டுள்ள மாருதி சிப்ட் காரை கண்டுபிடிக்கமுடியாததால் மட்டுமே குற்ற எண்.**4/2022** ல் **UN** செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். Renault Duster Car TN 70W1500 கார் ஓட்டுநர் மீது விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குற்ற

எண்.4/2022 ல் மாருதி சிப்ட் கார் மற்றும் Renault Duster Car TN 70W1500 இரண்டுமே விபத்தில் சம்மந்தப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மாருதி சிப்ட் காரின் நம்பர், இன்சின் நம்பர், சேஸ் நம்பர் ஆகியவற்றை வைத்து அந்த காரை கண்டுபிடிக்க முடியும் என்றால் சரிதான். எங்களால் மாருதி சிப்ட் காரை கண்டுபிடிக்க முடியும் என்றும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் அவரச கதியில் UN செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.